1 MAR 2016
சென்னை-600 03

**நிதித்(ஓய்வூதியம்) துறை**
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

**கடித எண்.7277/ ஓய்வூதியம்/2018, நாள். 21.02.2018**

அனுப்புநர்
திரு.க.சண்முகம், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**008452**

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்.
சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை- 600 009.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், சென்னை- 600 022.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
மாநில தகவல் ஆணையம், எண்.2, தியாகராய சாலை, ஆலை அம்மன் கோயில் அருகில், தேனாம்பேட்டை, சென்னை- 600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை), சென்னை- 600 018. (பெயரில்)
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை- 600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-II), சென்னை - 18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை- 600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை- 600 104.
செயலாளர்,தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை- 3.
மாநகராட்சி ஆணையர், சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம்/ திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர் / வேலூர்/ தூத்துக்குடி.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள் / முதன்மை நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள்.
அனைத்து மண்டல இணை இயக்குநர்கள், கருவூலக் கணக்குத் துறை.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை-600 006.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாநிலக் கழகங்கள் / நிறுவனங்கள்.

ஐயா / அம்மையீர்,

பொருள்: ஓய்வூதியம் - ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் - கூடுதல் ஓய்வூதியம் மற்றும் கூடுதல் குடும்ப ஓய்வூதியம் - தெளிவுரை கோருதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.42,நிதி(ஓய்வூதியம்)துறை, நாள்.07.02.2011.
2. அரசுக் கடித எண்.44093/ஓய்வூதியம்/2011-1, நாள் 24.02.2012.
3. முதன்மை செயலர் / கருவூல கணக்குத்துறை ஆணையர் அவர்களின் கடித எண்.ந.க.35972 / 2017 / உ2, நாள்.13.09.2017.

*********

மேலே, பார்வை ஒன்று மற்றும் இரண்டில் 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் /

கூடுதல் குடும்ப ஓய்வூதியம் 1.1.2011 முதல் பணப்பயனுடன் வழங்க ஆணை மற்றும் தெளிவுரைகள் வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

**2.** பார்வை-3-ல் முதன்மைச் செயலாளர் / கருவூல கணக்குத் துறை ஆணையர் அவர்கள், 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் வழங்குவதில் ஏற்படும் நடைமுறை சிக்கல்களை களையும் பொருட்டு கீழ்க்கண்டவாறு கருத்துரு சமர்பித்துள்ளார்.

1) குடும்ப ஓய்வூதியரின் ஓய்வூதியத்தொகை உரிய ஆவணங்களின் அடிப்படையிலும், மாநில கணக்காயரின் ஒப்புதல் அடிப்படையிலும் கருவூலத்தில் வழங்கப்பட்டு வருகிறது. பொதுவாக குடும்ப ஓய்வூதியர் வயது தொடர்பான பதிவுகள் ஏதும் ஓய்வூதியம் முன்மொழியப்பட்ட அலுவலகத்தில் பராமரிப்பது இல்லை. 80 வயது பூர்த்தி அடையும் நிலையில் கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் முதல் 30 ஆண்டுகள் கால இடைவெளி காரணமாக ஆவணங்கள் ஏதும் ஓய்வூதியரின் ஓய்வூதியம் முன்மொழிந்த அலுவலகத்தில் கிடைப்பதில்லை. இந்நிலையில் அவ்வலுவலகத்தால் வயதினை உறுதி செய்யப்படவேண்டும் என்ற நடைமுறை அரசாணையின் பயனை ஓய்வூதியர்களுக்கு வழங்குவதில் சில நடைமுறை சிக்கலை ஏற்படுத்துகின்றது. எனவே மாநில கணக்காயரால் வழங்கப்படும் ஓய்வூதிய கொடுப்பாணையில் பிறந்ததேதி/வயது குறிக்கப்படாத இனங்களில் ஓய்வூதியரின் வயதினை உறுதிசெய்ய உரிய ஆவணங்கள் இல்லை என ஓய்வூதியம் முன்மொழிந்த அலுவலகத்தால் தெரிவிக்கும் இனங்களில் அரசாணையில் பத்தி 5-ல் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் (1.PAN Card, 2. பள்ளி இறுதித் தேர்வு தேர்ச்சி சான்றிதழ், 3.Passport, 4.ஓட்டுநர் உரிமம் & 5. இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை) அல்லது அரசாணை எண்.138, நிதித்(ஓய்வூதியம்)துறை, நாள்.26.05.2017-ன்படி அனுமதிக்கப்பட்ட ஆதார் எண் போன்ற ஆவணங்களில் ஓய்வூதியதாரரால் முதன் முதலில் அளிக்கப்படும் வயது குறித்த ஆவணத்தினை இறுதியனதாகக் கொண்டு கூடுதல் குடும்ப ஓய்வூதியத்தினை நிரந்தரமாக அனுதிக்கலாம்.

2) ஓய்வூதியர் இறந்து குடும்ப ஓய்வூதியர் ஓய்வூதியம் பெறும் இனங்களில் குடும்ப ஓய்வூதியம் கோரி விண்ணப்பம் செய்யப்படும்போது தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளில் உள்ள விண்ணப்ப படிவம் 14-ல் இருந்து வயது உறுதி செய்திடலாம் என அரசாணையில் பத்தி 6-ல் குறிப்பிட்டுள்ளது. அவ்வாறு உறுதி செய்யப்படும்போது விண்ணப்ப படிவம் 14ல் உள்ள வயது / பிறந்த தேதி உடன் வேறுபடும்போது ஓய்வூதியதாரர்களால் வழங்கப்படும் ஆவணங்களில் எது குறைந்தபட்ச வயதோ அதன் அடிப்படையில் வயதினை உறுதி செய்து கூடுதல் ஓய்வூதியம் அனுமதிக்கலாம். ஒரு முறை வயது உறுதி செய்தபின் மீண்டும் மாற்றம் செய்ய கோரமாட்டேன் என்ற சான்றினை ஓய்வூதியரிடம் இருந்து பெறலாம்.

**3.** மேற்கண்ட முதன்மைச் செயலாளர் / கருவூல கணக்குத் துறை ஆணையர் அவர்களின் கருத்துருவினை ஏற்று, 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் வழங்குவதில் ஏற்படும் நடைமுறை சிக்கல்களை களைந்து காலதாமதமின்றி கூடுதல் குடும்ப ஓய்வூதியம் வழங்க மேற்கண்ட நடைமுறை பின்பற்ற தெளிவுரை வழங்கப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

(signature)

அரசு கூடுதல் தலைமைச் செயலாளருக்காக

<u>நகல் பெறுநர்:</u>

நிதி (அ.ந.மு.I / அ.ந.மு.II / அ.ந.மு.III / பல்வகை / ஓ.கு.தீ / ஊ.கு. / வரவு செலவு- பொது II / வரவு செலவு- பல்வகை / பொது)த் துறை, சென்னை- 9.

முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை- 600 009.
ஓய்வூதிய இயக்குநர், சென்னை- 600 035.
முதன்மைச் செயலர் மற்றும் கருவூல கணக்கு ஆணையர்,சென்னை-600 035.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை- 600 035.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.
இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை – 600 001.
இந்திய ரிசர்வ் வங்கி, அரசு மற்றும் வங்கிகள் கணக்குத் துறை, மத்திய அலுவலகம், மும்பை மத்திய இரயில்நிலையம் எதிரில், பைகுல்லா, மும்பை - 400 008 (75 நகல்கள்)
பொதுத்துறை வங்கிகளின் அனைத்து தலைமை அலுவலகங்கள் / மண்டல அலுவலகங்கள் – ஓய்வூதிய இயக்குநர், சென்னை- 600 035. மூலமாக.
அனைத்து பொதுத் துறை வங்கிகள் – ஓய்வூதிய இயக்குநர், சென்னை-35. மூலமாக.
தலைவர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம், டி.பி.ஐ. வளாகம், கல்லூரிச் சாலை, சென்னை- 6.
தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம், மேடவாக்கம் டேங்க் சாலை, கீழ்பாக்கம், சென்னை- 600 010.
தலைவர், அனைத்திந்திய ஓய்வுபெற்றோர் சங்கக் கூட்டமைப்பு, 22, கவரத் தெரு, மேற்கு சைதாப் பேட்டை, சென்னை- 600 015.
தலைவர், ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம், எண் 12, அபயாம்பாள்புரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்.
மாநிலத் தலைவர், அகில பாரத குடிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர் அமைப்பு, எண் 7, பாரதிதாசன் சாலை, அவினாசி, கோயம்புத்தூர் மாவட்டம்.
தலைவர், இந்திய அதிகாரிகள் சங்கம், எண்.35 ,திரு.வி.க.நெடுஞ்சாலை, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை- 600 014.
தலைவர், தமிழ்நாடு முதியோர் குடியுரிமை பெற்றோர் சங்கம், எண் வி 95, அண்ணா நகர், சென்னை- 40.
தலைவர், தமிழ்நாடு முதுநிலை குடியுரிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர்கள் சங்கம், எண்.38-பி, பிரதான சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி.
தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், நாராயணராவ் மாளிகை, முத்து காளத்தி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை- 600 005.
தலைவர், அரசு டான்சி ஓய்வு பெற்ற ஊழியர்கள் சங்கம், ப்ளாட் எண்.65, தாமரை சாலை, அய்யப்பா நகர், பம்பல், சென்னை- 600 075.
தலைவர், ஓய்வுபெற்ற வேளாண்மை பட்டதாரி சங்கம், மு-பிளாக், எண்.2, சாலை ரோடு, ஹவுசிங் யூனிட், திருச்சி-621 003.
மாநில தலைவர், தமிழ்நாடு முத்த வேளாண் வல்லுநர் பேரவை, எண்.11, நாச்சிமுத்து லேஅவுட், கே.கே.புதூர், கோயம்புத்தூர் மாவட்டம்.
தலைவர் ,தமிழ்நாடு மாநகராட்சி மற்றும் நகராட்சி ஓய்வூதியதாரர்கள் சங்கம், வரதப்பன் தெரு, கோட்டை, சேலம் - 636 001.
மாநில தலைவர், தமிழ்நாடு ஓய்வுபெற்ற அரசு ஊழியர் சங்கம், எண்.3(ஜி1), கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தலைவர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொதுப்பணித்துறை ஊழியர் சங்கம், எண்.3/454, வீரமா முனிவர் தெரு, முகப்பேர் கிழக்கு, சென்னை - 600 037.
மாநில தலைவர், ஊரக வளர்ச்சித்துறை ஓய்வூதியர்கள் சங்கம், எண்.3/145, தெற்குத் தெரு, கம்பரசம்பேட்டை அஞ்சல், திருச்சிராப்பள்ளி – 620 101.
தமிழ் நாடு ஓய்வூதியத் சங்கம், பதிவு எண்-84/2010 எண்.7, நீலி வீராசாமி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.